2002 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், என்ன கேட்டாலும் அமைச்சர் அதைத்தான் சொல்லப் போகிறார். பணம் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்றுதான் சொல்லப் போகிறார்.

திரு. ஐ. கணேசன்: 1998-ல் ஆய்வு செய்து ரூ.526 கோடிக்கு தீட்டிய திட்டம் இன்று ரூ.1008 கோடி அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்னும் காலம் செல்லச் செல்ல அது பெரும் தொகையாக, கிட்டத்தட்ட ரூ.1500 கோடியைத் தாண்டக்கூடிய நிலைமை ஏற்பட்டு அரசுக்குப் பெரும் சுமையாக ஆகிவிடும். ஆகவே, மத்திய அரசுக்கு நீங்கள் எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசு என்ன பதில் அளித்தது? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? அதற்கு தமிழக அரசு மேலும் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திட்டத்திற்காக தமிழக அரசு 21-01-2002 அன்று மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுவரை பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு வருகின்றபோது இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து, இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினைக்காக 2300 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பது ஆளுநர் உரையிலே கூறியிருப்பதை எல்லாம் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, தருமபுரி மாவட்டத்திற்குக் குடிநீர் கொடுப்பதற்கு, தருமபுரி மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு முன்னுரிமை கொடுத்து எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே அமைந்திருக்கிற இந்த அரசு நிச்சயமாக முழு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

[2002 மார்ச் 12

6—

பாமாயில் வழங்கல்

***5934—திரு. பி. கே. சேகர்பாபு:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் நிறுத்தப்பட்ட பாமாயிலை மீண்டும் வழங்க கருத்துரு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து எத்தனை கிலோ வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் எண்ணெய்களிலே பாமாயில் எண்ணெய் எல்லாவிதமான சத்து மிகுந்தது என்று அறிமுகப்படுத்தப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை இந்த பாமாயில் எண்ணெய் அரசு நியாய விலைக் கடைகளில் கிடைத்திருக்கிறது. மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப விலை குறைவாக உள்ளதாலும், சத்துள்ளதாகவும் இருப்பதால் இந்த பாமாயில் எண்ணெய் தொடர்ந்து அரசு நியாய விலைக் கடைகளில் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு மாநிலத்திற்கு வழங்கும் ஒதுக்கீட்டின் அடிப்படையிலேதான் பொது விநியோகத் திட்டத்தில் இந்த பாமாயில் எண்ணெய் வழங்கப்பட்டது. மைய அரசு மாநிலத்திற்கு பாமாயில் வழங்குவதை நிறுத்திவிட்டதால், பொது விநியோகத் திட்டத்தில் பாமாயில் விற்பனை 01-12-1999 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டிலே பாமாயில் எளிதாகவும், குறைந்த விலையிலும்

2002 மார்ச் 12]

கிடைக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறுத்தியிருக்கின்ற காரணத்தினாலே, இப்போது அந்தத் திட்டம் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெளி மார்க்கெட்டில் கிடைக்கும் எண்ணெய்களின் விலை ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும், சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவிற்கும், உற்பத்தியாளர்களே விலையை நிர்ணயம் செய்துகொள்கின்ற அளவிற்கும் சூழ்நிலை நாட்டிலே நிலவுகின்றமையால், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், எல்லா ரகங்களும் ஒரு கிலோவிற்கு இவ்வளவுதான் என்று விலையை அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாயிலை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்து மத்திய அரசாங்கம் இங்கே வழங்கிக்கொண்டிருந்தது. அது இப்போது எளிதாகவும், மக்களுக்கு நிறையவும் கிடைக்கின்ற காரணத்தினாலே, நல்ல தரத்தோடும் கிடைக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தைப் பொது விநியோகத் திட்டத்திலே மத்திய அரசாங்கம் நிறுத்தியிருக்கின்ற காரணத்தினாலே, இதைப் பற்றி இப்போது பரிசீலிப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலே இந்த மாதத்திற்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நியாய விலைக் கடைகளில் பாமாயில் வழங்குவது பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே. சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலிவான விலையில் வெளி மார்க்கெட்டில் இந்த எண்ணெய் கிடைக்கின்றதால் மத்திய அரசு இதை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது சரியான தகவலாக என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உண்மையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரேஷன் கடைகளில் கொடுக்கப்படுகின்ற பொருள்களின் விலையைவிட கூடுதல் விலையிலேதான் பொருள்கள் வெளியிலே விற்கப்படுகின்றன. ஆகவே, அத்தியாவசியப் பொருள்களை ரேஷன்

TRUTH ALONE TRIUMPHS

கடைகளில் விநியோகிக்கின்ற திட்டத்தை விரைவுபடுத்துகின்ற, விரிவுபடுத்துகின்ற அடிப்படையில் நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் 14 அத்தியாவசியப் பொருள்கள் ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இங்கே விநியோகிக்கப்பட்டு வந்த பாமாயில் போன்றவை நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுகுறித்து மத்திய அரசுடன் நம்முடைய மாநில அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, மீண்டும் அதை மலிவு விலையில் நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு இந்த பாமாயில் வெளி மார்க்கெட்டிலே எளிய முறையிலே கிடைக்கின்றதாலே, மக்களும் அதை வாங்குகின்ற காரணத்தினாலேதான் மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறுத்தியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு இதை மறுபரிசீலனைக்குக் கொண்டு வந்து, பொது விநியோகத் திட்டத்தில் விநியோகிக்க வேண்டுமென்ற நிலை வருகிறபோது, அரசு நிச்சயமாக அதை ஆலோசிக்கும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

7—

நகரங்களில் வீட்டுத் தோட்டங்கள்

***6845—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போன்ற பெரிய நகரங்களில் பசுமை ஏற்படுத்தவும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படச் செய்யவும், வீட்டுத் தோட்டங்கள், மாடித் தோட்டங்கள் அமைக்க செய்முறைப் பயிற்சிகள் நடத்துவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?